ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2195/7 - 2020 සැප්තැම්බර් මස 28 වැනි සඳුදා - 2020.09.28
*2195/7 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: KDS/HAR/4/2/1/47.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு இல.: 4-3/09/2015/WS/149.

கண்டி வடக்கு பாத்ததும்பர இணைந்த நீர் வழங்கல் செயற் திட்டத்தின் உடுவாவல சேவை நீர்த்தேக்கத்தின் நுழைவாயிலுக்காக காணித்துண்டு ஒன்றை எடுப்பதற்குத் தேவையான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவில், குலுகம்மன சியபத்துவ உப பிரிவில், 417, உடுவாவல மேற்கு கிராம அலுவலர் பிரிவில், உடுவாவல கிராமத்தில் அமைந்துள்ள, கண்டி மாவட்ட சிரேஷ்ட நில அளவையாளர் அதிகாரியினால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 320320 ஐக் கொண்ட காணியளவீட்டு வரைபடத்தில் வலய இல. 02 இல் பத்திர இல. 01 இல் காணித் துண்டு இல. 103 எனக் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தமாக 0.0481 ஹெக்டயார் விஸ்தீரண முடைய காணித் துண்டின் விபரம் :

*01.* **துண்டு இல. 103**

காணியின் பெயர் : - ; உரிமையாளர்கள் : பீ. பீ. ஜீ. சார்லிஸ், இல. 24, கொதடுவேவத்த, உடுவாவல, கட்டுகஸ்தொட்ட, ஜே. ஏ. விமலசேன, இல. 24/A, கொதடுவேவத்த, உடுவாவல, கட்டுகஸ்தொட்ட, ஜே. ஏ. ஹின்னி அப்புஹாமி, இல. 24/F, கொதடுவேவத்த, உடுவாவல, கட்டுகஸ்தொட்ட, ஏ. ராஜபக்ஷ, இல. 23, நாகஸ்பிட்டிய சந்தி, உடுவாவல, கட்டுகஸ்தொட்ட, நந்தா ஜெயகொடி, இல. 24/F, கொதடுவேவத்த, உடுவாவல, கட்டுகஸ்தொட்ட, மஹிந்த ராஜபக்ஷ, கலஹிடியாவத்த, உடுவாவல, கட்டுகஸ்தொட்ட, ஏ. பூஜித குணவர்தன, இல. 24/3, உஸ்கெடேவத்த, உடுவாவல, கட்டுகஸ்தொட்ட, இந்திராணி சிறியலதா பொல்கஸ் பிடிய, இல. 24/5, உஸ்கெடேவத்த, உடுவாவல, கட்டுகஸ்தொட்ட, பீ. பீ. ஜீ. ஜேம்ஸ், இல. 24/C, உஸ்கெடேவத்த, உடுவாவல, கட்டுகஸ்தொட்ட, விபுல பஸ்நாயக, உஸ்கெடேவத்த, இல. 24/1, மங்கள, உடுவாவல, கட்டுகஸ்தொட்ட; விஸ்தீரணம் : 0.0481 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும்

1A - G 33007 - 55 (2020/09)
*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 04 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மொஹான் தர்மதாச,
பிரதேச செயலாளர்,
ஹாரிஸ்பத்துவ.

பிரதேச செயலகம்,
ஹாரிஸ்பத்துவ,
2020, செத்தெம்பர் 24.

10 - 461

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: AKU/LAN/06/LA49.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 13/99/HW/47A.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆந் திகதிய 1602/17 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையிலே பக்கம் 7 ஏ, 7 ஆம் பிரிவின் கீழ் நான் அறியத்தந்த நில அளவை மாஅதிபரின் இறுதித் திட்ட வரைவிலே மேலதிக இல. 45 இல், காணித் துண்டு இல. 418 எனக் காண்பிக்கப்பட்ட காணியின் பெயர் அம்பேதொடவத்த என்பதை காப்பியான்கொடவத்த எனும் அம்பேதொடஓவிடவத்த என்று மீள் திருத்தப்பட்டதென்பதை இத்தால் மூலம் அறியத் தருகின்றேன். மேலதிக விபரத்திற்காக 2009.05.21 ஆந் திகதிய 1602/17 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஓ. வி. சந்தன திலகரத்ன,
பிரதேச செயலாளர்,
அக்குறஸ்ஸ.

பிரதேச செயலகம்,
அக்குறஸ்ஸ,
2020, செத்தெம்பர் 23.

10 - 462

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DIVPANN/LND/ACDEP/1/4/11.

2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதிய 2165/69 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அதற்குப் பதிலாக 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதிக்கு முன்னர் அறிவிக்கப்படல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அதற்குப் பதிலாக 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

ஆர். எம். எஸ். விக்ரமரத்ன பண்டார,
பிரதேச செயலாளர்,
பன்னல.

பிரதேச செயலகம்,
பன்னல,
2020, செத்தெம்பர் 18.

10 - 463

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : 4/1/1/32/J.

குருநாகல் மாவட்டம் குருநாகல் பிரதேச செயலாளர் மற்றும் காணி எடுத்தல் அதிகாரி ஈ. எம். எம். எஸ். ஏக்கநாயக்க ஆகிய நான் இத்தால் மூலம் அறியத்தருவது வர்த்தமானி இல. 2152/67, திகதி 06.12.2019, பக்க இல. 2A, துண்டு இல. 15 இல் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது என்பதை பொதுமக்களின் தகவலுக்காக நான் இதன் மூலம் அறிவிக்கின்றேன்.

| | | |
|---|---|---|
| இடத்தின் பெயர் | : | பல்கடபுரான் கும்புர |
| இடத்தின் பயன்பாடு | : | தோட்டத்துடன் கூடிய கிணறு (சீமெந்தினால் கட்டப்பட்டது) |
| உரிமை கோருபவர் | : | அரசு |
| ஆரம்ப உரிமை கோருபவர் | : | ஏ. பி. டி. எல். ஜெ. பதிரன |
| விஸ்தீரணம் | : | 0.0589 ஹெக்டயார். |

ஈ. எம். எம். எஸ். ஏக்கநாயக்க,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அதிகாரி,
குருநாகல்.

பிரதேச செயலகம்,
குருநாகல்,
2020, செத்தெம்பர் 21.

10 - 465